# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 625/2018 |
| நாள் | 13.02.2026 |
| வா.சா.2 | சுப்பிரமணியன் |
| வயது | 49 |
| ஊர் | சுக்காலியூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

வாதியை எனக்கு கடந்த 20 ஆண்டுகளாக தெரியும். வாதி அப்பிபாளையத்தில் குடியிருந்து வருகிறார். அவரின் வீட்டு எண் எனக்கு தெரியாது. பிரதிவாதி பானுமதியின் தந்தை மற்றும் தாயாரின் பெயர் தெரியாது. தற்போது பிரதிவாதி பானுமதி எங்கு குடியிருந்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு, நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால், சரிதான். வாதி அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டதின் பேரில் வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். ஹரிகரசுதன் என்பவர் கரூர் காமாட்சியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் ரூ. 3,10,000 என்ற இடத்தில் 3 என்ற எண் இடைச்சொற்களாக சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. வா.த.சா.ஆ–1 கடனுறுதிச்சீட்டில் ரூ.3,10,000 என்று எழுதப்பட்டுள்ளது 3 என்ற எண் மட்டும் நெருக்கி எழுதுவதற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால், இல்லை. என்னுடைய சௌகரியத்திற்கு தொகையை எழுதினேன். வா.த.சா.ஆ–1 கடனுறுதிச்சீடடில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றால், சரியல்ல. நான் கடனுறுதிச்சீட்டை எழுதியபோது ஹரிகரசுதன் என்பவர் அந்த இடத்தில் இருந்ததாகவும், எங்கள் முன்னிலையில் பிரதிவாதி வா.த.சா.ஆ–1

கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நானும், ஹரிகரசுதன் என்பவரும் வாதிக்கு நெருக்கமான நபர்கள் என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தாவா கடனுறுதிச்சீட்டை நான் போலியாக தயார் செய்து கொடுத்தேன் என்றும், அவ்வாறு கடனுறுதிச்சீட்டை தயார் செய்தபோது, கடனுறுதிச்சீட்டில் உள்ள தொகை ரூ. 3,10,000 என்று எழுதப்பட்டதில், 3 என்ற எண் மட்டும் இடைச்சொற்களாக என்னால் சேர்க்கப்பட்டது என்றால், சரியல்ல. நான் அமிர்தலிங்கத்திற்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு பிரதிவாதியை யாரென்றே தெரியாது என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.